அறியுமா ? மேலும் இப்பகுதிகள் வக்ப் போர்டு இனாம் தாரர்களுக்குச் சொந்தமான இடங்கள் என்று பதிவாகி உள்ளதால், எந்தப் பிரச்சினையையும் தனது அறிவாற்றலால் தீர்த்து வைத்து, நல்ல முடிவுகளை வழங்கும் நமது தமிழக முதல்வர். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்நெடுநாள் பிரச்சினையைத் தீர்க்கும் வண்ணம் இப்பகுதி வாழ் மக்களுக்குப் பட்டா கிடைக்கும் வண்ணம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியமும், வக்ப் வாரியமும் கலந்து பேசி, நல்லதொரு முடிவை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடங்களிலே, ஒருசில இடங்களிலே சட்டப் பிரச்சினைகள் இருக்கிற காரணத்தாலே நிலத்தை எடுத்து, அங்கே இருக்கும் குடிசைவாழ் மக்களுக்குப் பட்டா கொடுக்க உரிய சூழ்நிலை இல்லை. இருந்தாலும் அதை சுமுகமாகப் பேசி முடித்து, அங்கே இருக்கிற குடிசைவாழ் மக்களுக்குப் பட்டா கொடுப்பதற்கான முயற்சிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 49, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் —

49—

பெடரேஷனில் பட்டின் விலையைக் குறைக்க நடவடிக்கை.

*10872—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிச்சந்தையைவிட, பெடரேஷனில் பட்டின் விலை அதிகமாக உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைக் குறைக்க அரசின் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. துரை இராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பிப்ரவரி 92, மார்ச்சு, 1992 மற்றும் ஏப்ரல் 1992 ஆகிய மூன்று மாதங்களில் மட்டும், தமிழ்நாடு **கூட்டுறவு பட்டு உற்பத்தி இணையத்தில் (டான்சில்க்) பட்டின்**

199: அக்டோபர் 28]

விலை வெளிச்சந்தையினைவிட சற்று அதிகமாக இருந்துள்ளது. பட்டு கூடுகள் உற்பத்தி குறைவானதன் காரணமாக பட்டு நூல் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டு, அண்ணா பட்டு பரிமாற்றகத்திற்கு பட்டு நூல் வரவு குறைந்துவிட்டது. ஆனால் தேவை மிக அதிகமாக இருந்தது, இணையம், அண்ணா பட்டு மரிமாற்றகத்தில் போட்டி போட்டு, பட்டு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களின் தேவைக்கு கொள்முதல் செய்ய வேண்டிய நிலையில் பட்டு நூல் விலை மேற்கண்ட மாதங்களில் அதிகமாக இருந்துள்ளது. பட்டு நூல் தட்டுப்பாட்டின் காரணமாக விலை ஏறியது. தற்போது அத்தகைய விலை உயர்வு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் உதவியோடு தனியாரால் உற்பத்தி செய்யப்படுகிற பட்டை கண்டிப்பாக பெடரேஷன் மூலமாகத்தான் விற்பனை செய்யவேண்டும். வெளிச் சந்தையில் விற்கக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கச்சாப் பட்டினுடைய தேவைக்கேற்ப பட்டினுடைய விலை ஏறிக்கொண்டும், இறங்கிக் கொண்டும் இருக்கிறது. பட்டு உற்பத்தி அதிகமானால் இந்த வித்தியாசம் வருவதற்கு வாய்ப்பே இல்லை. எனவே நெசவாளர்கள் அதிகமாக வாழ்கிற ஆரணி, காஞ்சீபுரம் தொகுதிகளில் தற்போது இருப்பதைவிட அதிகமாக பட்டு உற்பத்தியைப் பெருக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதிகள் மட்டுமல்ல, பொதுவாக தமிழகம் முழுவதுமே பட்டு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்ற கொள்கையில்தான் அரசு இருக்கிறது. அந்த முயற்சியை எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்.

[1993 அக்டோபர் 28

முற்பகல் 10–45

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டினுடைய விலை கூடியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு ஆண்டிலும் எந்தெந்த மாதங்களில் எந்தெந்த சீசன்களில் இந்த பட்டின் விலையில் (Fluctuation) இருக்கிறது? அதை உயர்த்திக் கொடுப்பதற்கு நம்முடைய அரசின் மூலமாக எடுத்திருக்கும், எடுக்கப்போகும் நடவடிக்கைகள் என்ன என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : தனிக்கேள்வி போட்டால் புள்ளி விவரங்களைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் இன்றைய நிலையில், நம்முடைய வாரியத்தின் மூலமாக வெளிச்சந்தை விலையைவிடக் குறைவாகத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. நா.சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பட்டு உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் மிகச் சிறிய விவசாயிகள்தான். ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்றுதான் வைத்துக்கொண்டு பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்கிறார்கள். அவர்கள் தமிழகத்திலே அதை விற்கிறபோது நல்ல விலை கிடைக்கவில்லை என்றுதான், கர்நாடக மாநிலம் சாம்ராஜ நகர், கொள்ளேகால் போன்ற இடங்களுக்கு அந்தப் பட்டுக் கூடுகளைக் கொண்டு சென்று விற்பனை செய்கிறார்கள். இங்கே உற்பத்தி செய்கின்ற அவர்களுக்கு இங்கேயே நல்ல விலை கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? பட்டு உற்பத்தி என்பது பெரிய தொழிலதிபர்கள் செய்கிற தொழில் அல்ல. சிறுசிறு விவசாயிகள் செய்யக்கூடிய தொழில். எனவே அந்தப் பட்டுக் கூடுகளைத் தமிழகத்திலேயே விற்கின்ற அளவுக்கு, அவர்களுக்கு ஆர்வம் வருகிற அளவுக்கு கூடுதலான விலையை அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பட்டுக் கூடுகளைத் தமிழகத்திலேயே வாங்கி, முறுக்கு நூலாக மாற்றி அதை நெய்கின்ற அளவுக்கு, அதைக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கம். ஆனால் அதை முழுமையாக அரசே செய்துவிட முடியாது. தனியார் அம்மாதிரியான முயற்சிக்கு வந்தார்களே யானால் நம்முடைய 'சிட்கோ' மூலமும் மற்ற இலாக்காக்கள

1993 அக்டோபர் 28]

மூலமும் அவர்களுக்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்து, அதை இங்கேயே வாங்கி, இங்கேயே நூற்று நெய்கிற அளவுக்கு அதைக் கொண்டுவரலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 50, திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண். 51, டாக்டர் ஜெ. பரந்தாமன் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

51—

ஒன்றியங்களை தொழில்துறையில் முன்னேற்றும் திட்டம்.

*9568—டாக்டர் ஜெ. பரந்தாமன்:

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கும் வட்டங்களுக்கு (Taluk) மாறாக ஒன்றியங்களை (Panchayat Union) அறிவித்து, ஒன்றியங்களை தொழில் துறையில் முன்னேற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இந்த வினாவிற்கு விடையளிப்பதற்கு முன், தங்களுடைய முன் அனுமதியோடு எனது உணர்வுகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். இதுகாறும் வினா தொடுக்கும் இடத்திலே இருந்த என்னை, விடையளிக்கும் இடத்திற்கு உயர்த்தி, தமிழக அரசியல் வரலாற்றில் உயர்ந்த இடத்திலேயிருந்து நிறைந்த ஆட்சியைத் தந்து கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் சார்பிலேயும், என் தொகுதி மக்கள் சார்பிலேயும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியை காணிக்கையாக்கி, வினாவிற்கு விடையளிக்கிறேன்.

இல்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் புரட்சியில், தொழில் அமைதியில், தொழிலாளர் முன்னேற்றத்தில், இந்தியாவைத் தாண்டி உலக நாடுகளின் முன்னேற்றத்திற்கு இணையாக ஜெயங்கொண்டம் மின் திட்டம் போன்ற முன்னோடித் திட்டங்